ஸ்ரீ :

ஸ்ரீமதே ராமானுஜாய நம :

நம்பெருமாள் விஜயம்

(ஸத்யம் ஸத்யம் புந: ஸத்யம் யதிராஜோ ஜகத்குரு:)

(மலர் 445) Jun (2) / 2025

நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்

‘ஸ்ரீ அஹோபில தாஸன்‘ க.ஸ்ரீதரன்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:
திருவே தஞ்சம்
திருவரங்கனே தஞ்சம்
தஞ்சமடைந்த நம் ராமானுஜன் திருவடிகளே தஞ்சம்

கைப்பொருள்கள் முன்னமே கைக்கொண்டார் காவிரி நீர்
செய்ப்புரள ஓடும் திருவரங்கச் செல்வனார்
எப்பொருட்கும் நின்று ஆர்க்கும் எய்தாது நான் மறையின்
சொற்பொருளாய் நின்றார் என் மெய்ப்பொருளும் கொண்டாரே.

காவேரி வர்த்ததாம் காலே காலே வர்ஷது வாஸவ:
ஸ்ரீரங்கநாதோ ஜயது ஸ்ரீரங்கஸ்ரீச்ச வர்த்ததாம்

ஸத்யம் ஸத்யம் புந: ஸத்யம் யதிராஜோ ஜகத்குரு:

உட்பொதிவு

1. லக்ஷ்மீ தந்த்ரம் 3

2. திருவாய்மொழி (ஈடு வ்யாக்யானம்)...4

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீபாஞ்சராத்ர ஆகம நூலான

லக்ஷ்மீ தந்த்ரம்

(பகுதி – 265)

92. இதி முத்ராகணா: ஸர்வஸ்தவோத்திஷ்ட: புரந்தர
ஆராதந அதிகாரார்தம் ச்ருணு ஸ்நாநவிதிம் பரம்

பொருள் – இந்த்ரனே! இப்படியாக உனக்கு நான் முத்ரைகளுடைய கணங்கள் அனைத்தையும் கூறினேன். இனி, ஆராதனை செய்வதற்கான அதிகாரம் குறித்த பகுதியில், முதலில் உயர்ந்த “நீராடும் விதி” குறித்துக் கூறுகிறேன்.

ஸ்நாநவிதி நிரூபணம்

93. அந்தர்பஹி: மலோபேதம் அலக்ஷ்மீ: ப்ரதிபத்யதே
தஸ்யா நிவாரணார்தாய ஸ்நாநம் ஸர்வத்ர சிஷ்யதே

பொருள் – அலக்ஷ்மியானவள், உள்ளும் புறமும் அசுத்தத்தால் நிறைந்து உள்ளாள். இத்தகைய அசுத்தங்கள் உபாஸகனைப் பாதிக்காதவிதமாக, அவளுடைய விலக்குதல் குறித்து அனைத்து இடங்களிலும் நீராடுதல் குறித்துக் கூறப்பட்டுள்ளது.

ஸ்ரீரங்கநாச்சியார் திருவடிகளே சரணம்
ஸ்ரீகமலவல்லி நாச்சியார் திருவடிகளே சரணம்

... தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:
ப்ரபந்நஜந கூடஸ்தரான ஸ்வாமி நம்மாழ்வார் அருளிச் செய்த

திருவாய்மொழி

இதற்கு ஸ்வாமி வடக்குத் திருவீதிப் பிள்ளை அருளிச் செய்த
முப்பத்தாறாயிரப்படி என்னும் ஈடு வ்யாக்யானம்
மூலமும், எளிய தமிழ்நடையும்
(பகுதி – 410)

6-4-9. கலக்க ஏழ் கடல் ஏழ் மலை உலகு ஏழும் கழியக் கடாய்
உலக்கத் தேர் கொடு சென்ற மாயமும் உட்பட மற்றும் பல
வலக்கை ஆழி இடக்கைச் சங்கம் இவை உடை மால் வண்ணனை
மலக்கும் நா உடையேற்கு மாறு உளதோ இம் மண்ணின் மிசையே

பொருள் – வைதிகன் ஒருவனுடைய புத்திரர்கள் விஷயமாக, நீர் மற்றும் நிலம் என்ற வேறுபாடு இல்லாமல், அண்ட கபாலத்திற்கும் அப்பால் தனது தேரைச் செலுத்துதல் என்பது தொடக்கமாக உள்ள பல வியக்க வைக்கும் லீலைகளைச் செய்தவனும்; பரத்வத்தின் அடையாளமாக வலது திருக்கரத்தில் சக்கரத்தையும், இடது திருக்கரத்தில் சங்கும் என்பதாகக் கொண்டவனும், ச்யாமள நிறம் கொண்டவனும் ஆகிய க்ருஷ்ணன், மகிழ்ச்சியின் காரணமாகக் கலங்கி அமர்ந்து கேட்கும்படியாகச் செய்யும் பாசுரங்கள் கூறவல்ல நாக்கு கொண்ட எனக்கு, இந்த மண்ணின் மீது ஒப்பாக உள்ளவர்கள் யாரும் உள்ளனரா?

அவதாரிகை – “வைதிக புத்ராநயந முதலான அபதாநங்களையுடைய ஸர்வேச்வரனை மலக்கும் நாவீறுடைய என்னோடு ஒப்பாருண்டோ?”, என்கிறார்.

விளக்கம் – “வைதிகன் ஒருவனுடைய மறைந்த புத்திரர்களை மீட்டுக் கொண்டு வந்து அளித்தல் போன்ற செயல்கள் கொண்ட ஸர்வேச்வரனை மயங்கும்படிச் செய்யும் நாக்கு வலிமை கொண்ட எனக்கு ஒப்பு யாரும் உள்ளனரா?”, என்கிறார்.

வ்யாக்யானம் - (கலக்கவேழ் கடலேழ் மலையுலகேழும் கழியக் கடாய்) ஏழ்கடலேழ் மலையுலகேழும் கலக்க கழியக் கடாய். கலக்க - ஒக்க; அதாவது தேரை நடத்துகிறபோது நீரோடு மலையோடு தறையோடு வாசியற ஒக்க நடத்தினபடி. அன்றிக்கே, கலக்க - ஏழ்கடல் என்று கடலுக்கு விசேஷணமானபோது, க்ஷோபத்தையுடைத்தான கடல் என்றபடி. அங்ஙனுமன்றிக்கே, ஏழ்கடலேழ்மலையுலகேழையும் கழிய நடத்துகிறபோது அதிர நடத்தியென்றுமாம். (உலக்கத் தேர்கொடு சென்ற மாயமும்) கார்யமான தேரைக் காரணமான மூலப்ரக்ருதியிலே நடத்துகிறவிடத்தில் அழியாதபடி நடத்தின ஆச்சர்யமும். உலக்க - முடிய. (உட்பட மற்றும் பல) – வைதிக புத்ரர்களை இத்தேசத்தினின்றும் கொண்டு போருகையும், போன செவ்வியிலே கொடு வந்து கொடுக்கையும், ப்ராதஸ் ஸவநத்துக்குப் பின்பு மாத்யந்திந ஸவநத்துக்கு முன்பே இதடங்கச் செய்கையும்.

விளக்கம் – (கலக்க ஏழ் கடல் ஏழ் மலை உலகு ஏழும் கழியக் கடாய்) - ஏழு கடல்கள் , ஏழு மலைகள், ஏழு லோகங்கள் ஆகிய அனைத்தையும் ஒரே போன்று கடந்து செல்லும்படியாக; அதாவது தேரைச் செலுத்தியபோது நீருடனும், மலையுடனும் தரையுடனும் எந்தவிதமான வேறுபாடும் இன்றி ஒரே போன்று செலுத்துதல்; அல்லது “கலக்க” என்பதைக் கடலுக்கு அடைமொழியாகக் கொண்டு, கலங்குதல் கொண்ட கடல் என்று கொள்ளலாம்; அல்லது இவற்றைக் கடந்து செல்லும்போது “அதிர நடத்தி” என்றும் கூறலாம். (உலக்கத் தேர்கொடு சென்ற மாயமும்) - கார்யப்பொருளாக உள்ள தேரை, காரணப்பொருளான மூலப்ரக்ருதியின் அப்பாலும் நடத்திச் சென்றபோது, அது ஏதும் அழியாதபடி நடத்திய ஆச்சர்யம். அதாவது தேரும் அழியவில்லை, தேர் சென்ற வேகத்தில் ப்ரக்ருதியும் பாதிப்படையவில்லை. உலக்க என்றால் முடிய என்று பொருள். (உட்பட மற்றும் பல) – வைதிக புத்திரர்களை இந்த உலகிலிருந்து கொண்டு செல்லுகையும், இவ்விதம் கொண்டு சென்ற அழகிலேயே மீண்டும் கொண்டு வந்து தருகையும், காலையில் செய்யவேண்டியச் செயல்களை செய்து முடித்து, மதியம் செய்யவேண்டிய செயல்களைச் செய்வதற்கு முன்பாக இவை அனைத்தையும் செய்கையும்.

வ்யாக்யானம் - (வலக்கையித்யாதி) இவ்விடத்தை பட்டரருளிச் செய்யா நிற்கச் செய்தே கஞ்சனூரில் வண்டுவரைப்பெருமாளிருந்தவர், “ ‘மால்வண்ணனை மலக்கு

நாவுடையேன்' என்னவமையாதோ, 'வலக்கையாழியிடக்கைச் சங்கமிவையுடை' என்கிற இதுக்குச் தாத்பர்யமென்?" என்ன; "சோளேந்த்ரசிங்கனை யுளுக்காக்கப் பண்ணுகிறேன் என்கிறார் காண்!" என்றருளிச்செய்தார். ஸர்வாதிக வஸ்துவுக்கு லக்ஷணமிறே சங்க சக்ரங்கள். "அவாக்ய அநாதர:" என்கிற ஸர்வாதிக வஸ்துவை விக்ருதமாக்கும் நாவீறுடையே னென்கிறார். (மால்வண்ணனை) கறுத்த நிறத்தையுடைய ஸர்வேச்வரனை. (மலக்கு நாவுடையேற்கு) இவருக்தியில் கலங்குமாகாதே அவன்தான். இவர் கலங்கிச் சொல்லச் சமைந்தாற்போலேயாகாதே அவனும் கலங்கிக் கேட்கச் சமைந்தபடி. (மாறுளதோ இம்மண்ணின் மிசையே) பரமபதத்தில் அனுபவம் வாய்ப்புகுநீராகையாலே அத்தை யொன்றாக நினைத்திருக்கிறிலர். (இம்மண்ணின் மிசை மாறுளதோ) "ஒப்புண்டு, இல்லை" என்று அதிசங்கை பண்ணுகைக்குத்தான் விஷயமுள்ளது நித்யவிபூதியிலேயன்றோ?

விளக்கம் – இந்த இடத்தை ஸ்வாமி பராசரபட்டர் அருளிச்செய்தபோது, கஞ்சனூரில் வாழ்ந்து வந்த வண்டுவரைப்பெருமாள் என்பவர் பட்டரிடம் "மால்வண்ணனை மலக்கு நாவுடையேன்" என்று கூறினால் போதாதோ? அதனையும் உரைத்து, தொடந்து 'வலக்கையாழியிடக்கைச் சங்கமிவையுடை' என்றும் ஏன் கூறவேண்டும்?", என்று வினவினார். இதற்கு பட்டர், "சோளேந்திரசிங்கன் என்னும் பெயர் கொண்ட நம்பெருமாளுடைய யானையைக் கூட கலங்கும்படி செய்கிறேன் என்று சிலர் கூறுவர். அதனைப் போன்று, சக்கரம் மற்றும் சங்கு ஏந்திய பெருமாளையும் நான் கலங்கும்படி செய்கிறேன் என்று கூறுவதற்காக இவ்விதம் அருளிச்செய்தார்", என்றார். அனைத்தையும் நியமிப்பவன் என்பதற்கு அடையாளம் சங்கு மற்றும் சக்கரம் ஆகும். சாந்தோக்யத்தில் –அவாக்யதா: அநாதர: - மௌனமாக உள்ளவன் - என்பவனாக உள்ளவனும், அனைத்தையும் நியமிப்பவனாக உள்ளவனும் ஆகிய அவனையும் கூடக் கலங்கும்படிச் செய்யும் நாவீறு கொண்டவன் என்கிறார். (மால்வண்னனை) - கறுத்த நிறம் கொண்ட ஸர்வேச்வரனை. (மலக்கு நாவுடையேற்கு) - ஆனால் இவருடைய சொற்கள் கேட்டு, அனைத்தையும் நியமிக்கும் அவன் கலங்குவானோ என்று கேட்கலாம்; இதற்கு விடை அளிக்கிறார். இவருடைய சொற்களில் அவன் கலங்குபவன் ஆனான்; இதற்கான காரணத்தைக் கூறுகிறார்; இவர் தனது சொற்களைக் கலங்கியபடி கூறுவதற்கு முனைந்தது போன்று, அவனும் கலங்கிக் கேட்பதற்கு முனைந்தான். (மாறுளதோ இம்மண்ணின் மிசையே) - இரண்டு விபூதிகளிலும் ஒப்பில்லை என்று கூறாமல், "மண் மிசை மாறில்லை" என்று ஏன்

கூறினார்? பரமபதத்தில் உள்ள அனுபவம் தலை முடிய உள்ளதால் அதனை இங்கு எண்ணவில்லை; இந்தப் பூமியில் உண்டா என்றால், அதிலும் ஒப்பு இல்லை என்கிறார். (இம்மண்ணின் மிசை மாறுளதோ) - “ஒப்பு உள்ளது, ஒப்பு இல்லை” என்று ஐயம் ஏற்படுவதற்கான விஷயம் நித்யவிபூதியில் மட்டுமே உள்ளது அல்லாமல், இங்கு இல்லை.

6-4-10. மண் மிசைப் பெரும் பாரம் நீங்க ஓர் பாரத மா பெரும் போர்
பண்ணி மாயங்கள் செய்து சேனையைப் பாழ்பட நூற்றிட்டுப் போய்
விண் மிசைத் தன தாமமே புக மேவிய சோதி தன் தாள்
நண்ணி நான் வணங்கப் பெற்றேன் எனக்கு ஆர் பிறர் நாயகரே

பொருள் – இந்தப் பூமியின் மீது, விச்வம்பரையாக உள்ளவளுக்கும் கூடப் பொறுத்துக் கொள்ள அரியதாக உள்ளவிதத்தில், மிகவும் வலிமையான பாரமாக உள்ள நிலை நீங்கும்படியாக, இதனைப் போன்று இரண்டாவது இல்லை என்னும்படியான “பாரதம்” என்னும் மிகப் பெரிய யுத்தத்தை உண்டாக்கி, தனது ஸங்கல்பத்தை மீறி ஆயுதம் எடுத்தல் மற்றும் பகலை இரவாக்குதல் தொடக்கமாக உள்ள பல வியக்க வைக்கும் செயல்களைச் செய்து, அனைத்து படைகளும் பாழடைந்து கிடப்பதற்கு ஈடாகச் சூழ்ந்து அவற்றை முடிந்து, இங்கு வந்த செயலானது முடிந்த பின்னர் தனக்கே உரிய பரமாகாசத்தில் எழுந்தருளிய ஜ்யோதி ஸ்வரூபனாகிய க்ருஷ்ணனுடைய திருவடிகளை அடைந்து நான் தொண்டுகள் செய்யப்பெற்றேன். இவ்விதம் கைங்கர்யம் என்ற ஸாம்ராஜ்யத்தைப் பெற்ற என்னை நியமிப்பவர்கள் யார் உள்ளனர்?

அவதாரகை – “அபாயபஹுளமான ஸம்ஸாரத்திலே வந்தவதரித்து, நிரபாயமாகப் பரமபதத்திலே போய்ப் புக்கபடியை யநுபவிக்கப் பெற்ற எனக்கு வேறே சிலர் நிர்வாஹகர் வேண்டும்படி குறையுடையவனோ நான்” என்கிறார்.

விளக்கம் - “அபாயங்கள் அதிக அளவில் உள்ள ஸம்சாரத்தில் வந்து அவதரித்து, இதனை அபாயம் இல்லாதபடியாகச் செய்த பின்னர் பரமபதத்திற்கு மீண்டும் சென்று அமர்ந்த க்ருஷ்ணனுடைய இந்தச் செயல்களை எப்போதும் எண்ணியபடி உள்ள என்னை வழி நடத்துவதற்கு சிலர் வேண்டும்படியான குறை எனக்கு உள்ளதோ?”, என்கிறார்.

வ்யாக்யானம் - (மண்மிசைப் பெரும்பாரம் நீங்க) "விச்வம்பரை" என்றும், "க்ஷமை, பொறை" என்றும் பேரையுடைத்தாய்ப் பரிக்கக் கடவதான பூமியாலும் பொறுக்கவொண்ணாதபடியிறே துர்வர்க்கம் திரண்டபடி. த்ரிபாத்விபூதியில் "யத்ர பூர்வே ஸாத்யாஸ் ஸந்திதேவா:" என்கிறபடியே கனத்தாருண்டாயிருக்கச் செய்தேயும், பாரமில்லையிறே அஹங்கார ஸ்பர்சமுடையாரில்லாமையாலே. தங்கள் பாரத்தை அவன் தலையிலே வைத்திருக்கும் அவர்களிறே யவர்கள்.

விளக்கம் – (மண்மிசைப் பெரும்பாரம் நீங்க) - "விஸ்வம்பரை - அனைத்தையும் தாங்குவது" என்றும், "க்ஷமை, பொறை" என்றும் பல பெயர்களைக் கொண்டதாக உள்ள இந்தப் பூமியாலும் கூடத் தாங்கிக் கொள்ள இயலாதபடி அல்லவோ தீயவர்கள் கூட்டம் திரண்டு நின்றது? ஆனால், இதனைக் காட்டிலும் மூன்று மடங்கு திரண்டு காணப்படும் பரமபதம் பொறுத்துக் கொள்ளவில்லையோ? அதனைக் காணும்போது இதற்குப் பாரம் அதிகமோ என்பதற்கு விடை அளிக்கிறார்; பரமபதத்தில், "யத்ர பூர்வே ஸாத்யாஸ் ஸந்திதேவா: - எங்கு பழையவர்களாகிய ஸத்திரர் என்னும் தேவர்கள் உள்ளனரோ" என்பதற்கு ஏற்ப, கனத்தவர்கள் உள்ளபோதிலும், அவர்களுக்கு அஹங்கார ஸம்பந்தம் இல்லை என்பதால், பாரமாக இல்லை. ஏன் பாரம் இல்லை என்றால், அவர்கள் தங்களுடைய பாரத்தை ஸர்வேச்வரனுடைய தலையில் ஏற்றி வைத்துள்ளவர்கள் அல்லவோ?

வ்யாக்யானம் - (ஓர் பாரத மாபெரும் போர்பண்ணி) அத்விதீயமான மஹாபாரதமாகிற மஹாயுத்தத்தைப் பண்ணி. (மாயங்கள் செய்து) பகலையிரவாக்குவது, "ஆயுதமெடேன்" என்று ஆயுதமெடுப்பது, எதிரியுடைய மர்மத்தைக் காட்டிக் கொடுப்பதானவை தொடக்கமானவற்றைச் செய்து. (சேனையைப் பாழ்பட நூற்றிட்டு) சேனை வெறுந்தறையாம்படி மந்த்ரித்து. "யஸ்ய மந்த்ரீச கோப்தா ச" என்னக் கடவதிறே. "ஆயுதமெடுக்கவொட்டோம்" என்கையாலே, சூழ்ச்சியாலே யழித்தான்.

விளக்கம் – (ஓர் பாரத மாபெரும் போர்பண்ணி) – இதனைப் போன்று இரண்டாவது ஏதும் இல்லை என்னும்படியாக உள்ள மஹாபாரதம் என்பதான மஹாயுத்தத்தை ஏற்படுத்தி. (மாயங்கள் செய்து) - சூரியனை மறைத்து பகலை இரவாக்கியது, "ஆயுதம் எடுக்கமாட்டேன்" என்ற உறுதியை மாற்றிக்கொண்டு சக்கரத்தை எடுத்தது, எதிரியுடைய மர்மங்களைக் காண்பித்துக் கொடுத்தது

என்பது தொடக்கமாகப் பலவற்றையும் செய்து. (சேனையைப் பாழ்பட நூற்றிட்டு) – அந்தப் படைகள் அனைத்தும் வெறும் தரையாக மாறுவதாக மந்திர யோஜனைகள் செய்து. ஆனால் இவன் மந்திரியாக இருந்தானோ என்பதற்கு ப்ரமாணம் காண்பிக்கிறார்; மஹாபாரதம் ஆரண்யபர்வம் (49-20) – யஸ்ய மந்த்ரீச கோப்தா ச - யாருக்கு க்ருஷ்னன் மந்திரியாக உள்ளானோ – என்பது காண்க. எதற்காக இப்படிப்பட்ட பல செயல்களையும் செய்யவேண்டும், சக்கரத்தைக் கொண்டு அனைத்தையும் முடித்திருக்கலாம் அல்லவோ என்பதற்கு விடை அளிக்கிறார்; “ஆயுதம் எடுக்கமாட்டேன்” என்று ஸங்கல்பம் செய்ததால், அனைத்தையும் சூழ்ச்சியால் அழித்தான்; சூழ்ச்சி என்றால் உபாயம், விசாரம் மற்றும் வஞ்சகம்.

வ்யாக்யானம் - (போய் விண்மிசைத்தன தாமமே புகமேவியசோதி தன் தாள்) ப்ரதிகூலரை நிரஸித்ததுக்கு மேலேயன்றோ இவர்களிருந்த நிலத்திலிராதே பரமபதத்திலே போய்ப் புகப் பெற்றபடி! என்று உகக்கிறார். பொய்யாஸநமிடுவார், பரிபவிப்பாரான இந்நிலத்தை விட்டுப் பரிவரேயான பதத்தேறப் போகப்பெறுவதே! வந்த கார்யம் சமைந்தவாறே யெழுந்தருளி, பரமாகாசத்திலே தனக்கு அஸாதாரணமான வாஸஸ்த்தாநத்திலே சென்று ப்ரவேசித்த ஜ்யோதிஸ் ஸ்வரூபனான க்ருஷ்ணனுடைய திருவடிகளை. “க்ருத்வாபாராவதரணம்” இத்யாதி. “ப்ருதிவ்யா: - பாராவதாரணம் - க்ருத்வா - ப்ருதுலோசந: - மோஹயித்வா ஜகத்ஸர்வம்” - ப்ரதிகூலரை யடங்கலும் உழவுகோலாலே விழவிட்டு, அநுகூலரை யடங்கலுங் கண்ணாலே விழவிட்டுப் போனான். “கதஸ் ஸ்வம்ஸ்த்தாநமுத்தமம்” – விண்மிசைத் தனதாமமே புக. “உத்தம:” கம்ஸாதிகள் துர்யோதநாதிகளால் வரும் அச்சமின்றியே, தனக்குப் பரிவரானவர்களிருக்கிற நிலத்திலே போய்ப் புகப் பெற்றபடி. ஒரு தீர்த்தத்தினன்று நாயிறுபோது ஆண்டாலும் எம்பாரும் தங்களிலே சந்தித்து, “அஹங்கார மமகார தூஷிதராயிருப்பார் பத்துக் கோடி பேர் நடுவே, அதிஸுகுமாரமான திருமேனியைக் கொண்டு பத்து நாளெழுந்தருளி, நிரபாயமாகப் புக்கருளப் பெற்றபடி கண்டதே!” என்று ஒருவரையொருவர் தண்டனிட்டுத் தழுவிக் கொள்ளா நிற்க, சீயர் கண்டேன் என்றருளிச் செய்வர். (நண்ணி நான் வணங்கப் பெற்றேன்) – காலயவநன் ஜராஸந்தன் தொடக்கமானாரைப் போலே எதிரிட்டுக் கிட்டுகையன்றிக்கே, முறையாலே கிட்டப்பெற்றேன். (எனக்கார் பிறர் நாயகரே) அவனுடைய அவதாரந் தொடக்கமாக, நடுவுள்ள அபாயங்களைத் தப்பி ஆச்ரிதரை வாழ்வித்துத் தனக்கமர்ந்த நிலத்தே போய்ப் புக்கபடியளவும் அநுபவிக்கப் பெற்ற

எனக்கு ஆர்தான் நியாமகர்? என்கிறார். "பயிலுந்திருவுடையார் யவரேலும்" என்கிறத்தை மறந்தார்போலேயிருந்தது; அவர்களைப் பிறராக நினையாரிறே.

விளக்கம் - (போய் விண்மிசைத்தன தாமமே புகமேவியசோதி தன் தாள்) - பகைவர்களை முற்றிலுமாக அழித்த பின்னர் அல்லவோ இவன் இந்தப் பூமியில் இருக்காமல், பரமபதத்திற்குச் சென்று புகுந்தான் என்று உகக்கிறார். ஆனால் இங்கு இருப்பதை விட அவன் அங்கு சென்றதே நலம் என்று எண்ணி உகக்கும் அளவிற்கு அவனுக்கு இங்கு தீமைகள் ஏற்பட்டதா? அவை என்ன என்பதற்கு விடை அளிக்கிறார். தூது சென்றபோது பொய்யான இருக்கையை அமைத்தவர்கள், அவமானம் செய்பவர்கள் போன்றவர்கள் உள்ள இந்தப் பூமியை விட்டு, அவனுக்காகப் பரிந்து நிற்பவர்கள் மட்டுமே உள்ள பரமபதத்திற்குச் சென்றான் என்பதால் உகந்தார். இங்கு வந்த கார்யம் முடிந்த பின்னர், இங்கிருந்து புறப்பட்டு, பரமாகாசத்தில் தனக்கே உரித்தான இருப்பிடத்திற்குச் சென்று புகுந்த, ஜ்யோதி ரூபனாக உள்ள க்ருஷ்ணனுடைய திருவடிகளை. இவன் இந்தப் பூமியின் பாரத்தை நீக்கிய பின்னர் தனது இருப்பிடத்திற்குச் சென்றான் என்பதற்கு ப்ரமாணம் மஹாபாரதம் மௌசல பர்வத்தில், "ப்ருதிவ்யா: - பாராவதாரணம் - க்ருத்வா - ப்ருதுலோசந: - மோஹயித்வா ஜகத்ஸர்வம் - ப்ரதிகூலர்கள் அனைவரையும் உழவுகோல் கொண்டு விழும்படியாகவும், தனக்கு அனுகூலர்களைத் தனது திருக்கண்களால் விழும்படியாகவும் எனச் செய்து சென்றான்", என்பதாகும். கம்ஸன், துரியோதனன் போன்றவர்களால் அச்சம் ஏதும் இன்றி, தனக்குப் பரிபவர்கள் மட்டுமே உள்ள இடத்திற்குச் சென்றான். தங்களுடைய இருப்பிடம் சென்றால் உகப்பு உண்டாகும் என்பதற்கு ஒரு நிகழ்வை காண்பிக்கிறார். திருவரங்கத்தில் ப்ரஹ்மோத்ஸவம் முடிந்து தீர்த்தவாரி முடிந்து, சூரியன் அஸ்தமிக்கும் மாலை நேரத்தில், நம்பெருமாள் மூலஸ்தானம் அடைந்தான். அப்போது எம்பாரும் முதலியாண்டானும், "நான் மற்றும் என்னுடையது என்ற தோஷங்களால் பீடிக்கப்பட்டவர்கள் பத்து கோடி பேர் உள்ளபோது, அவர்கள் நடுவில் மென்மையான திருமேனியை கொண்ட இவன், பத்து நாட்கள் எழுந்தருளி, எந்தவிதமான அபாயமும் இன்றி மீண்டும் தனது மூலஸ்தானத்தை அடைந்ததை நாம் காண்டோம்", என்று ஒருவரை ஒருவர் விழுந்து வணங்கி, தழுவிக் கொண்டதை நான் கண்டேன் என்று நஞ்சீயர் அருளிச்செய்வார். (நண்ணி நான் வணங்கப் பெற்றேன்) - காலயவநன் மற்றும் ஜராஸந்தன் தொடக்கமாக உள்ளவர்கள் போன்று அவனுடன் யுத்தம் செய்து நிற்காமல்,

எனக்கு அவனிடம் உள்ள முறையுடன் அருகில் சென்றேன். (எனக்கார் பிறர் நாயகரே) - இதனை "எனக்கு பிறர் ஆர் நாயகர்" என்று படிக்கவேண்டும்; அதாவது "எனக்கு உத்தரவு செய்ய வேறு யார் உள்ளனர்?", என்று கருத்து. ஏன் எவ்விதம் கூறினார்? அவனுடைய அவதார காலம் தொடக்க்மாக, நடுவில் உள்ள அபாயங்கள் அனைத்திலிருந்தும் அவன் தப்பித்து, அடியார்களை நன்றாக வாழ வைத்து, தனக்கே உரிய இடத்திற்கு சென்று புகுந்தது முடிய உள்ள அனைத்தையும் முற்றிலுமாக அனுபவிக்கப் பெற்ற எனக்கு யார் கட்டளை இட உள்ளனர்? ஆனால் அவனுடைய அடியார்கள் தனக்கு நாயகர்களாக உள்ளபோது இவ்விதம் கூறலாமா என்பதற்கு விடை அளிக்கிறார். இதனை "பயிலும்" என்று தொடங்கும் இரண்டு வாக்கியங்கள் மூலம், இரண்டுவிதமாகக் கூறுகிறார். "பயிலுந்திருவுடையார் யவரேலும்" என்ற திருவாய்மொழியில் கூறியவற்றை மறந்து போனார் என்பது முதல் கருத்து. அந்த அடியார்களை, ஈச்வரனைத் தவிர்த்துள்ள மற்றவர்கள் அல்லர், அவர்களும் அவனைப் போன்றவர்களே ஆவர் என்று மற்றவர்களாக நினைக்காமல் உள்ளதாலும் ஆகும் என்பது இரண்டாவது கருத்து.

6-4-11. நாயகன் முழு ஏழ் உலகுக்கும் ஆய் முழு ஏழ் உலகும் தன்
வாயகம் புக வைத்து உமிழ்ந்து அவை ஆய் அவை அல்லனும் ஆம்
கேசவன் அடி இணை மிசைக் குருகூர்ச் சடகோபன் சொன்ன
தூய ஆயிரத்து இப்பத்தால் பத்தர் ஆவர் துவள் இன்றியே

பொருள் – அனைத்து லோகங்களுக்கும் நிர்வாஹகனாகவும்;தன்னால் இவ்விதம் நிர்வாகம் செய்யப்படும் லோகங்களைப் ப்ரளயமானது கொள்ளாதபடி இந்த லோகங்கள் அனைத்தையும் தனது வாய்க்குள் புகும்படியாகச் செய்த பின்னர் அவற்றை வெளியே விட்டு, அவற்றுக்கு அந்தராத்மாவாக உள்ளதால், அவற்றின் ஆதாரமாகவும்; அவற்றின் தோஷங்களால் தீண்டப்படாதவனாகவும், கேசியை அழித்த கேசவனும் ஆகிய க்ருஷ்ணனுடைய திருவடிகள் விஷயமாக நம்மாழ்வார் அருளிச்செய்த தோஷம் ஏதும் இல்லாத ஆயிரம் பாசுரங்களில், க்ருஷ்ணனுடைய அவதாரத்தை வெளிப்படுத்தும் இந்தப் பத்துப் பாசுரங்கள் மூலம், க்ருஷ்ணனைக் குறித்து மட்டுமே, வேறு எதிலும் செல்லாத பத்தியும், மற்ற எதனையும் எதிர்பாராத பக்தியும் கொண்டவர்கள் ஆவர்.

அவதாரிகை - நிகமத்தில் கிருஷ்ண சேஷ்டிதங்களைப் பேசின இப்பத்துங் கற்றார், தம்மைப் போலே கிருஷ்ண பக்தராவரென்கிறார்.

விளக்கம் – “க்ருஷ்ணனுடைய லீலைகள் குறித்துப் பேசிய இந்த பத்துப் பாசுரங்களையும் கற்பவர்கள், தம்மைப் போன்றே க்ருஷ்ண பக்தர்கள் ஆவர்”, என்கிறார்.

வ்யாக்யானம் - (நாயகனித்யாதி) ஸகல சேதநாசேதாங்களுக்கும் நியந்தாவாய், ப்ரளயாபத்தில் திருவயிற்றிலே வைத்து ரக்ஷித்து, உள்ளிருந்து நெருக்குப்படாமே வெளிநாடு காணப் புறப்பட விட்டு, ஸர்வாவஸ்த்தையிலும் ஸகல பதார்த்தங்களும் “தான்” என்கிற சொல்லிலே அடங்கும்படி அவற்றை ப்ரகாரதயா சரீரமாகவுடையனாய், இப்படியிருக்கச் செய்தே தக்கததோஷைரஸம்ஸ்ப்ருஷ்டனான.

விளக்கம் – (நாயகனித்யாதி) – இதனை “முழு ஏழு உலகுக்கும் நாயகன் ஆய்” என்று படிக்கவேண்டும். அதாவது எதிலும் குறைவு இல்லாத ஏழு உலகிற்கும் நாயகனாக. அனைத்து சேதந அசேதநங்களுக்கும் எஜமானனாகவும்; ப்ரளய ஆபத்தின்போது இந்த லோகங்கள் அனைத்தையும் தனது திருவயிற்றில் வைத்துக் காப்பாற்றி, அவை உள்ளே இருந்து நெருக்குதல் அடையாமல் வெளியே செல்லும்படியாக விட்டு, அனைத்து நிலைகளிலும் அனைத்து பொருள்களும் “நான் (பகவான்)” என்ற சொல்லில் அடங்கும்படியாக, அவற்றைத் தனது திருமேனியாகக் கொண்டவனாகவும்; இவ்விதம் உள்ளபோதிலும் அவற்றின் தோஷங்களால் தீண்டப்படாமல் உள்ளவனாகவும்.

வ்யாக்யானம் - (கேசவனடியிணையிசை) கேசி ஹந்தாவான ஸர்வேச்வரன் திருவடிகளிலே. “கீழிற்றிருவாய்மொழியிற் மொழியிலே சொன்ன ஸர்வேச்வரத்தையும், இத்திருவாய்மொழியிலே கேசி ஹந்தாவான க்ருஷ்ணனுடைய அவதாரத்தையும் அநுபாஷித்துத் தலைக் கட்டுகிறது” என்று சொல்லுவர். “க்ருஷ்ண ஏவ ஹி லோகாநாம்” என்கிறபடியே, க்ருஷ்ண விஷயமே சொல்லுகிறதென்னுதல்.

விளக்கம் – (கேசவன் அடியிணையிசை) - கேசியை வீழ்த்திய ஸர்வேச்வரனுடைய திருவடிகளில் க்ருஷ்ணாவதாரம் குறித்து கூறியபடி உள்ளபோது, ஸர்வேச்வரத்தன்மை குறித்து இங்கு ஏன் கூறுகிறார்? “நாயகன் முழு ஏழு உலகுக்குமாய்” என்று தொடங்கி, “அவை அல்லனுமாய்” என்பது முடிய, “நல்குரவு”

என்றுள்ள திருவாய்மொழியில் கூறப்பட்ட ஸர்வேச்வரத்தன்மையையும்; “குரவை ஆய்ச்சியர்” என்ற திருவாய்மொழியில் கூறப்பட்ட க்ருஷ்ணனுடைய செயல்களை, “கேசவன்” என்பதாகக் கேசியை அழித்த க்ருஷ்ணனுடைய அவதாரத்தையும் இங்கு மீண்டும் கூறி நிறைவு செய்கிறார் என்று கருத்து. மஹாபாரதம் சபாபர்வம் (38-23) – க்ருஷ்ண ஏவ ஹி லோகாநாம் - அனைத்து லோகங்களுக்கும் காரணம் க்ருஷ்ணனே ஆகிறான் - என்று க்ருஷ்ணனையே அனைத்து ஜகத்தின் ஸ்ருஷ்டி, ஸ்திதி மற்றும் ஸம்ஹார காரணமாகக் கூறுவதால், “குரவை ஆய்ச்சியர்” என்கிற திருவாய்மொழியில் கூறப்பட்ட க்ருஷ்ணனுடைய செயல்களை இங்கு மீண்டும் கூறி நிறைவு செய்கிறார் என்று கருத்து. அதாவது இந்தப் பாசுரம் முழுவதும் க்ருஷ்ணனைக் குறித்தே கூறுகிறது என்று கருத்து.

வ்யாக்யானம் - (தூயவாயிரத்துப் பத்தால் பத்தராவர் துவளின்றியே) இப்பத்தையும் அப்யஸித்தவர்கள் ஆழ்வாரைப் போலேயாவர். இப்பத்தையுடைத்தாகையாலே தூய்மை யுடைத்தான ஆயிரமென்னுதல்; அன்றிக்கே, ஆயிரத்திலும் வைத்துக் கொண்டு, க்ருஷ்ண வ்ருத்தாந்தத்தைச் சொல்லுகையாலே, தூய்மையை யுடைத்தான இப்பத்தென்னுதல். (துவளின்றியே பத்தராவர்) துவளாவது குற்றம். அதாவது, அவதாராந்தரங்களிற் போகாதே க்ருஷ்ண வ்ருத்தாந்தத்திலே கால்தாழ்வர்.

விளக்கம் – (தூய ஆயிரத்துப் பத்தால் பத்தராவர் துவள் இன்றியே) - இந்தப் பத்தையும் கற்க வல்லவர்கள், நம்மாழ்வார் போன்று ஆவர். இந்தப் பத்து பாசுரங்களையும் தங்களில் கொண்டுள்ளதால், தூய்மை நிறைந்தவையாக உள்ள ஆயிரம் என்று கருத்து. அல்லது ஆயிரம் பாசுரங்களில் உள்ள இந்தப் பத்தும் க்ருஷ்ணனுடைய செயல்களைக் கூறுவதால் தூய்மை நிறைந்துள்ளன என்றும் கூறலாம். (துவளின்றியே பத்தராவர்) - துவள் என்றால் தோஷம். அதாவது மற்ற தேவதைகளை நாடாமல் க்ருஷ்ணனுடைய லீலைகளில் மட்டுமே நிலைத்து நிற்பவர்கள்.

திருவாய்மொழி ஆறாம் பத்து நான்காம் திருவாய்மொழி ஸம்பூர்ணம்

திருவாய்மொழி ஆறாம் பத்து ஐந்தாம் திருவாய்மொழி
துவளில் ப்ரவேசம்

வ்யாக்யானம் - இத்திருவாய்மொழிக்குக் கீழும்மேலும் எல்லாம் எம்பெருமானைக்

கவி பாடினார்; இத்திருவாய்மொழியில் தம்படி சொல்லுகிறார். ஸிம்ஹாவலோகந ந்யாயத்தாலே "பொய்ந்நின்ற ஞானந்" தொடங்கி இவ்வளவும் வர தமக்கு பகவத் விஷயத்திலுண்டான ப்ராவண்யாதிசயத்தை அந்யாபதேசத்தாலே பேசுகிறார். "இத்திருவாய்மொழி ஆழ்வார் ப்ரக்ருதி சொல்லுகிறது" என்று நம் முதலிகளெல்லாரும் போர விரும்பியிருப்பர்கள். பகவத் ப்ரஸாதத்தாலே லப்த ஜ்ஞாநராய், "யதோ வாசோ நிவர்த்தந்தே" என்கிற விஷயத்தை மறுபாடுருவப் பேசின தாமே வேணுமாகாதே தம்படி பேசும் போதும்.

விளக்கம் – இந்தத் த்ருவாய்மொழிக்கு முன்பும் பின்பும் உள்ள அனைத்து இடங்களிலும் ஸர்வேச்வரனைக் குறித்துக் கவி பாடினார். இந்தத் திருவாய்மொழியில் தனது விதத்தைக் கூறுகிறார். இவருடைய விதம் என்ன? தூரமாகச் சென்ற சிங்கம் முன்பு கடந்து சென்றவை அனைத்தையும் மீண்டும் ஒருமுறை திரும்பி நோக்கிய பின்னர் அப்பால் செல்வது ஸிம்ஹ அவலோக நியாயம் ஆகும். இதனைப் போன்று இவரும் திருவிருத்தம் (1) – பொய்ந்நின்ற ஞானம் – என்பது தொடங்கி இதுவரை தமக்கு பகவத் விஷயத்தில் ஏற்பட்டுள்ள ஈடுபாட்டின் மிகுதியை மற்றவர்களுக்கு உபதேசிப்பதன் மூலம் காண்பிக்கிறார். இந்தத் திருவாய்மொழியானது ஆழ்வாரின் விதத்தை உணர்த்துகிறது என்பதற்கு சான்று, "இந்தத் திருவாய்மொழி ஆழ்வாருடைய தன்மையைக் கூறுகிறது" என்று நம் முன்னோர்கள் அனைவரும் இதனை மிகவும் விரும்பி நிற்பதே ஆகும், ஆனால் தனது தன்மைகள் குறித்துத் தானே உரைத்தால் அது தற்பெருமை ஆகாதோ என்பதற்கு விடை அளிக்கிறார். பகவானுடைய கடாக்ஷம் மூலம் கிட்டிய ஞானம் கொண்டவராக, உபநிஷத்தில் – யதோ வாசோ நிவர்த்தந்தே – எந்த ஒரு ப்ரஹ்மத்தின் ஆனந்தத்தை அறிய இயலாமல் வாக்கும் மனமும் திரும்பினவோ - எனபதற்கு ஏற்ப உள்ள விஷயத்தைக் குறித்து மிகவும் ஆழமாக உரைப்பதற்கு, தாம் அல்லாது வேறு யாரும் இல்லாதது போன்று, இந்த விஷயத்தைக் குறித்த தனது நிலையை உரைப்பதற்கும் இவர் அல்லாமல் யாரும் இல்லை.

வ்யாக்யானம் - ஸ்ரீஜநகராஜன் திருமகள் பிறந்த ஸமயத்திலே ஜ்யோதிர் வித்துக்களை யழைத்து, "இவள் ஜீவிக்கும்படிகளென்?" என்று கேட்க; "இவள் ஜீவிக்கும்படிகளில் ஒரு குறையில்லை; ஸார்வபௌமனாயிருப்பா னொருவனைக் கைப்பிடிக்கவுங் கடவள்; இங்ஙனே இருக்கச் செய்தேயும் வநவாஸ ரஸம் அநுபவிக்கக்கடவள்" என்றார்கள்; அப்படியே இப்பெண்பிள்ளை பிறந்தபோது இவள் திருத்தாயாருள்ளிட்டார் நிதாநஜ்ஞராயிருப்பாரை அழைத்து "இவள்

ஜீவிக்கும்படிகளெங்ஙனே?" என்று கேட்க, "எல்லாம் நன்றாய்த் தலைக்கட்டக்கடவது; ஆனாலும் இவளுக்கு ஓர் அபம்ருத்யுவுண்டு; அது தப்பினாளாகில் ஸுகமே ஜீவிக்கும். அதாவது, திருத்தொலைவில்லிமங்கலத்திற் கொடுபோகாதே ஒழியப் பெறிலிவளைக் கிடைக்கும்" என்றார்கள்.

விளக்கம் – தோழியானவள் தாய்மார்களை நோக்கி, "திருவாய்மொழி (6-5-5) - பிரான் – என்பதாகச் செய்தீர்கள்; அதாவது திருத்தொலைவில்லிமங்கலத்திற்கு இவளை அழைத்துச் சென்றால் இவளுக்குக் கெடுதல் ஏற்படும் என்று அறிந்திருந்தபோதிலும் நீங்கள் அந்த இடத்தை இவளுக்குக் காண்பித்து கொடுத்தீர்கள்", என்று கூறினாள். ஆனால் அங்கு சென்றால் இவளுக்குத் துன்பம் ஏற்படும் என்று தாய்மார்கள் அறிந்துள்ளனர் என்று இவள் எப்படிக் கூறினாள் என்பதற்கு ப்ரமாணம் காண்பிக்கிறார். ஸ்ரீஜநகராஜன் தனக்குத் திருமகளாக ஸீதை பிறந்த நேரத்தில் ஜோதிடம் அறிந்தவர்களை அழைத்து, "இவள் எவ்விதம் வாழ்வாள்?", என்று கேட்டார். அதற்கு அவர்கள், "இவள் வாழ்வதில் எந்தக் குறையும் இல்லை. அனைத்து லோகங்களையும் தனது உடைமையாகக் கொண்ட ஒருவனை இவள் திருக்கரம் பற்றுவாள். இவ்விதம் உள்ளபோதிலும் இவள் வனவாசத்தின் சுவையை அனுபவிப்பாள்", என்றனர்.அதனைப் போன்று இங்கும் இந்தப் பராங்குசநாயகி பிறந்தவுடன் தாய்மார்கள், நற்காரணங்களை அறிந்தவர்களை அழைத்து, "இவள் எவ்விதம் வாழ்வாள்?", என்று கேட்டனர். அதற்கு அவர்கள், "எல்லாம் நன்றாகவே அமையும். ஆயினும் இவளுக்கு ஒரு அகால மரணம் ஏற்படலாம். அதிலிருந்து இவள் தப்பித்தால், சுகமாகவே வாழ்வாள். அதாவது திருத்தொலைவில்லிமங்கலத்திற்கு இவளை அழைத்துச் செல்லாமல் இருந்தால் இவள் நல்வாழ்வு பெறலாம்", என்றனர்.

வ்யாக்யானம் - இவள் ஜீவியாதொழியிலும் திருத்தொலைவில்லிமங்கலத்தில் கொடுபோகாதொழியவல்ல குடியன்றே! "இவளங்கே புக்கு முடியவமையும்" என்றிருப்பார் சிலரிறே. பிராட்டி வநவாஸ ரஸம் அநுபவியாதவன்றிறே இவள் திருத்தொலைவில்லி மங்கலத்தில் புகாதொழிய வல்லளாவது?

விளக்கம் – இவ்விதம் திருத்தொலைவில்லிமங்கலத்திற்கு இவளை அழைத்துச் செல்லவில்லையென்றால் பிழைப்பாள் என்று நன்கு அறிந்துள்ளபோதிலும் ஏன்

அழைத்துச் செல்கிறார்கள் என்பதற்கு விடை அளிக்கிறார். இவளுக்கு என்ன நேர்ந்தாலும் அங்கு செல்லாமல் இருக்கக்கூடிய குலம் அல்லவே இவர்கள்! "இவள் அங்கு சென்றால் முடிவாள் என்றால், அதுவே சிறந்தது", என்று அல்லவோ உள்ளனர்! ஸீதை வனவாச காலத்தின் சுவையை அறியாமல் இருந்திருந்தால் அல்லவோ இவளும் திருத்தொலைவில்லிமங்கலத்திற்குச் செல்லாமல் இருக்கமுடியும்?

வ்யாக்யானம் - ஸ்ரீநளர் வார்த்தையை நினைப்பது. ஸ்ரீவாநர வீரர்கள், "மலையைக் கொண்டு கடலையணை செய்கை ஸம்பாவிதமோ" என்ன; ஸ்ரீநளர், "பெருமாள் காடேற எழுந்தருளுகையும், பிராட்டியை ரக்ஷஸ் அபஹரிக்கையும், பெருமாள் சோகிக்கையும் ஸம்பாவிதமோ? ஏதாகிலும் வருமவை தப்பாதிறே" என்றார். இது ஸ்ரீராமாயணத்தி லுண்டானவிடத்தே கண்டு கொள்வது.

விளக்கம் – இந்த இடத்தில் ஸ்ரீநளனுடைய சொற்களை எண்ணிப் பார்ப்போம். ஸமுத்ரராஜன் இராமன் முன்பாகத் தோன்றியபோது, "விச்வகர்மாவின் ஒரே புத்திரனாகிய நளன் என்பவன் ஸமுத்திரத்தில் பாலம் அமைப்பதற்கான அறிவு கொண்டவன் ஆவான். அவனைக் கொண்டு என் மீது பாலம் அமைத்துக்கொள்வீர்", என்றான். அப்போது நளன் இராமனுடைய திருவடிகளில் பணிந்து, "ஸமுத்ரராஜன் சொற்கள் ஸத்யமே ஆகும். நான் இப்படிப்பட்ட பாலம் அமைக்க வல்லவன் ஆவேன்", என்று கூறிய சொற்களை இங்கு எண்ணிப் பார்க்கவேண்டும் என்று கருத்து. இதனை இங்கு ஏன் கூறவேண்டும்? பராங்குசநாயகியை திருத்தொலைவில்லிமங்கலம் அழைத்துச் செல்வது குலத்தின் இயல்பு என்பது மட்டும் அல்ல, இங்குள்ள தெய்வத்தின் செயல் ஆகும், ஆகவே தவிர்க்க இயலாது; இதனைப் போன்று, நளனை இதற்காகவே இருப்பதாகச் செய்வது தெய்வத்தின் செயல் ஆகும், இதனைத் தவிர்க்க இயலாது. ஸ்ரீவானரவீரர்கள், "மலையைக் கொண்டு ஸமுத்ரத்தில் பாலம் அமைக்க இயலுமோ?", என்றார்கள். இதற்கு நளன், "இராமன் கானகம் புகுந்ததும், ஸீதையை ராக்ஷஸன் அபகரித்ததும், இராமன் சோகத்தில் உள்ளதும் நடக்குமோ? ஆனால் நடந்தன. ஏதேனும் இருந்தாலும் இவை தப்பிக்க இயலாது அல்லவோ?", என்றான்.

வ்யாக்யானம் - தேஹாத்மாபிமாநிகளாயிருப்பார்க்கு எத்தனையேனும் அறிவு பிறந்தாலும் "ஸ்தூலோஹம் க்ருசோஹம்" என்கிற நிலை மாற்றப் போகாதாற்போலே, இவரையும் ஸர்வப்ரகாரத்தாலும் உகந்தருளின நிலங்களிலேநின்றும் த்ருஷ்டத்தில் குறை சொல்லி மீட்கப் போகாது. க்ஷுத்ர விஷய ப்ரவணராயிருப்பார் "அதர்மம்" என்றும், "பழி" என்றும், "மேல் நரகம்" என்றும் சொன்னால் மீளார்களிறே. இங்கு குணாதிக விஷயமாகையாலே ஒரு குறை சொல்லி மீட்கப் போகாதே. "குறை சொல்லுவோம்" என்று நினைக்கிலும் குணாதிக்யத்தைச் சொல்லுமத்தனையிறே. அது பின்னை ப்ராவண்யத்துக்கு உடலாமத்தனையிறே. பழியுமுண்டாயிடுக, மதிப்புக்கேடும் வருக; ஆனாலும் அது கண்டு மீளமாட்டாத அத்யவஸாயமிறே இவளது.

விளக்கம் – பராங்குசநாயகியைத் திருத்தொலைவில்லிமங்கலத்திற்கு அழைத்துச் சென்றாலும், அங்குள்ள பகவத் விஷயத்தில் ஏதேனும் குறையைக் கூறி அவளை மாற்ற இயலாதோ என்பதற்கு விடை அளிக்கிறார். சரீரமே ஆத்மா என்று எண்ணுபவர்களுக்கு எத்தனை ஞானம் ஏற்பட்டாலும், "ஸ்தூலோஹம் க்ருசோஹம் - நான் பெருத்தவன் நான் மெலிந்தவன்" என்ற நிலை மாறாமல் உள்ளது; அதனைப் போன்றே இவளையும் அனைத்துவிதங்களிலும் ஸர்வேச்வரன் மகிழ்வுடன் எழுந்ருளியுள்ள திவ்ய தேசங்களிலிருந்து, அங்குள்ளவன் விஷயத்தில் குறை கூறி மாற்ற இயலாது. தாழ்ந்த விஷயங்களில் ஈடுபாடு கொண்டவர்களிடம் "அதர்மம், பழி, மேல்நரகம்" என்று எத்தனை உரைத்தாலும், அந்த விஷயங்களிலிருந்து மீண்டு வரமாட்டார்கள் அல்லவோ? இங்கு குணங்களின் மிகுதியைக் கூறுவதால் எந்த ஒரு குறையும் கூறி மீட்க இயலாது. சரி, "கொடியன், கடியன்" என்று குறைகள் கூறலாம் அல்லவோ என்றால், அவ்விதம் கூற எண்ணினாலும், குணங்களின் மிகுதியையே கூறுவர். மேலும் அவ்விதம் கூறும்போது அதிகமான ஈடுபாடு ஏற்படுத்தவும் வாய்ப்பு உள்ளது. இவள் இந்த விஷயத்தில் கொண்ட ஈடுபாட்டால் மீட்க இயலாது என்பது மட்டும் அல்ல, இந்த விஷயத்தில் மிகுந்த உறுதி கொண்டுள்ளதாலும் இவளை மீட்க இயலாது என்பதைக் கூறுகிறார்; இந்த விஷயத்தில் இவள் உள்ள நிலை காரணமாகப் பழி உண்டானாலும் சரி அல்லது மதிப்பிற்குக் கேடு ஏற்பட்டாலும் சரி, அவற்றைக் கண்டும் கைவிடாத உறுதி அல்லவோ இவளிடம் உள்ளது?

வ்யாக்யானம் - அங்ஙனேயாகிலும், இவர்கள் இவ்விஷயத்தில் நின்றும் இவளை மீட்கப் பார்க்கிறது என்? என்னில், "பருவம் நிரம்பாதிருக்கச் செய்தேயும்

நம்மளவல்லாத அதிமாத்ர ப்ராவண்யம் இவளுக்கு விளையாநின்றது; அது இவளையிழக்கவரிற் செய்வதென்?” என்னும் அச்சமாயிற்று இவர்களுக்கு ஓடுகிறது. இனித்தான் அதிமாத்ர ப்ராவண்யம் ஸாதகர் கையிலே கிடக்கக் காண்கையாலே “இவள் ஸாதந புத்தியா ப்ரவர்த்திக்கிற் செய்வதென்?” என்னும் பயத்தாலே மீட்கவும் பார்ப்பரே.

விளக்கம் – சரி, இவர்கள் குலத்தின் இயல்பு காரணமாகவும், தெய்வத்தின் செயலாலும், இவளுடைய ஈடுபட்டாலும், இவளுடைய மன உறுதியாலும் இவ்விதம் இவள் மீட்க இயலாதபடி உள்ளாள் என்று தாய்மார்கள் அறிந்துள்ளபோதிலும், இவளை மீட்க எண்ணுவது ஏன் என்பதற்கு விடை அளிக்கிறார். இவர்கள் தங்கள் மனதில், “இவளுடைய வயதிற்கு மீறி, தகுந்த வயது வராதபோதிலும், நம் அளவு இல்லாதபடியாக, அளவு கடந்த ஈடுபாடானது இவளில் ஏற்பட்டு விளையாடியபடி உள்ளது. இந்த நிலையானது இவளை நாம் இழக்கும்படிச் செய்தால் என்ன செய்வது?”, என்று அச்சம் கொண்டனர். இவ்விதம் மீட்க முயல்வதன் காரணம் என்ன என்பதைக் கூறுகிறார். “அளவு கடந்த ஈடுபாடானது, தக்க ஸாதனத்தைக் கையில் கொண்டவர்களுக்கு கிடைக்கக் காண்பதால், இவள் ஸாதன புத்தி நிறைந்தவளாக நின்றால் என்ன செய்வது?”, என்று அச்சம் கொண்டதன் காரணமாக இவளை மீட்க முயல்வார்கள்.

வ்யாக்யானம் – “இப்ப்ராவண்யம் ஸ்வரூபாதிரேகியாகிலிறே ஸாதநத்தில் அந்வயிப்பது” என்றிறே யிருப்பதிவள். “ஸ்வரூப பேதத்துக்கு இசைந்தால் ஸ்வரூபாநுரூபமான கார்யங்களுக்கு இசையவேண்டாவோ?” என்று காணும் இவள் கருத்து. சேஷிக்கு உபாய பாவம் ஸ்வரூபாநுபந்தியான பின்பு, சேஷபூதனுக்கும் ப்ராவண்யம் ஸ்வரூபாநு பந்தியாகக் கடவதிறே.

விளக்கம் - இத்தகைய மிகுந்த ஈடுபாடானது ஸ்வரூபத்திற்கு விரோதமாக இருந்தால் என்ன செய்வது என்ற அச்சம் பராங்குசநாயகிக்கும் இருக்கலாம் அல்லவோ என்பதற்கு விடை அருளிச்செய்கிறார். இத்தகைய ஈடுபாடானது ஸ்வரூபத்திற்கு விரோதம் என்னும்போது அல்லவோ ஸாதனத்தில் சேர்வது ஏற்படும் என்று அல்லவோ இவள் உள்ளாள்? “ஸ்வரூபத்திற்கு விரோதம் என்னும்போது அல்லவோ” என்றால், “நாம் அவனால் பாதுகாக்கப்படும் பொருள் என்ற ஸ்வரூபத்திற்கு மாறுபட்டது அல்லவோ” என்பதாகும். ஸ்வரூபத்திற்கு மாறுபட்டது அல்ல என்று கூறுவதன் கருத்து என்ன என்பதை அருளிச்செய்கிறார்;

“ஸ்வரூப வேறுபாட்டிற்கு இசைந்தால், ஸ்வரூபத்திற்கு ஏற்ற செயல்களுக்கும் இசையவேண்டும் அல்லவோ?”, என்பதே இவளுடைய எண்ணமாக உள்ளது; அதாவது இங்கு செயல் என்பது, ஈடுபாட்டின் விளைவாக உள்ள கைங்கர்யங்கள் ஆகும். இவளுடைய கருத்தானது இவ்விதமாக உள்ளபோதிலும் வஸ்துவின் இயல்பு காரணமாக ஸாதனத்தில் சேரலாம் அல்லவோ என்பதற்கு விடை அளிக்கிறார்; எஜமானனுக்கு உபாயமாக இருந்தல் என்பது ஸ்வரூபத்திற்குச் சேர்வதாக உள்ளது என்ற பின்னர், அடிமையாக உள்ளவனுக்கு ஈடுபாடு என்பது ஸ்வரூபத்தில் அடங்கியதாகவே இருக்கும் அல்லவோ?

வ்யாக்யானம் - இனித்தான் கீழில் திருவாய்மொழியோடு இத்திருவாய்மொழி ஸங்கதமானபடியென்? என்னில், க்ருஷ்ண குணாநுபவத்தைப் பண்ணா நிற்கச்செய்தே, குடிக்கிற தண்ணீர் விக்கி அதுதானே பாரவச்யத்தை விளைப்பிக்குமாபோலே, அவ்வநுபவந்தானே ரஸாந்தரத்தே மூட்டத் தமக்குப் பிறந்த அவஸாதத்தை யந்யாபதேசத்தாலே பேசுகிறார். அதாவது “பொய்ந் நின்ற ஞானந்” தொடங்கி இவ்வளவும் வர, பகவத் விஷயத்தில் பூர்ணாநுபவமின்றிக்கே யிருக்கையாலே, தமக்குப் பிறந்த ப்ராவண்யாதிசயத்தை அருளிச்செய்கிறார். அன்றிக்கே, கீழநுபவித்த அநுபவந்தான் மாநஸாநுபவ மாத்ரமாய், பாஹ்ய ஸம்ச்லேஷாபேக்ஷை பிறந்து, அது பெறாமையால் வந்த கலக்கத்தை அந்யாபதேசத்தாலே பேசுகிறார் என்றுமாம்.

விளக்கம் – அடுத்து கடந்த திருவாய்மொழிக்கும், இந்தத் திருவாய்மொழிக்கும் உள்ள ஸம்பந்தம் என்ன என்பதற்கு இரண்டுவிதமாகப் பதில் கூறுகிறார். இவற்றில் முதலில் பராசரபட்டருடைய கருத்தையும், இரண்டாவதாகப் பூர்வர்கள் கருத்தையும் அருளிச்செய்கிறார். க்ருஷ்ணனுடைய திருக்கல்யாண குணங்களை அனுபவித்தபடி உள்ளபோது, குடிக்கும் தண்ணீரானது விக்கலை ஏற்படுத்தினால், அதுவே அந்த விக்கலைப் போக்கும் இனிய நிலையை உண்டாக்குவது போன்று, அந்த குணங்களுடைய அனுபவமே மற்ற விஷயங்களில் தனக்கு ஈடுபாட்டை ஏற்படுத்த, அதன் மூலம் தனக்குப் பிறந்த துன்பத்தை மற்றவர்களுக்குச் செய்யும் உபதேசத்தால் கூறுகிறார். அதாவது திருவிருத்தம் (1) – பொய்ந்நின்ற ஞானம் - என்பது தொடங்கி, இதுவரை பகவத் விஷயங்களில் பூர்ணமான அனுபவம் கிட்டவில்லை; ஆகவே தனக்குப் பிறந்த ஈடுபாட்டின் மிகுதியை

அருளிச்செய்கிறார்; இது முதல் வகையான கருத்து ஆகும். அடுத்து, இரண்டாவது கருத்தைக் கூறுகிறார். அல்லது இதுவரை கூறப்பட்ட அனுபவமானது மனதால் மட்டுமே அனுபவிக்கப்பட்டது என்பதாலும், புறத்திலும் அனுபவிக்கவேண்டும் என்ற ஆசை ஏற்பட்டும் அது கிட்டப்பெறாத காரணத்தால் ஏற்பட்ட கலக்கத்தை மற்றவர்களுக்குச் செய்யும் உபதேசத்தால் பேசுகிறார் என்றும் கொள்ளலாம்.

வ்யாக்யானம் - இப்பெண்பிள்ளை ப்ரக்ருதியறியச் செய்தேயும் தாய்மார் விழுக்காடறியாமையாலே திருத்தொலைவில்லிமங்கலத்திலே கொடு புக, அவள் "அரவிந்தலோசந" என்பது, "தேவபிரான்" என்பது, நீர்மையைச் சொல்லுவது, மேன்மையைச் சொல்லுவது, ஒப்பனை வாசியறிந்தமை தோற்றச் சொல்லுவதாய் வாய் வெருவ, இவள் நிலை இருந்தபடியால் "இவளைக் கிடைக்கமாட்டாதாகாதே" என்று தாய்மார் வெறுத்துத் தோழிபாடே வந்து "இவள் படியுனக்குத் தெரியாமையில்லை. இவளை மீட்கலாம் விரகு சொல்லவேணும்" என்ன; தோழி, "நீங்களே இவளுக்கு ப்ராவண்யத்தையுண்டாக்கி இப்போதாக இவளை மீட்க ஆசைப்படுகிற இத்தால் ப்ரயோஜமென்? ஏற்கவே பரிஹரிக்கப் பெற்றதில்லை; இனி இவள் பக்கல் நசையறுங்கோள்; இவளை நிஷேதிக்கப் பாராதே நீங்களும் ஸஹகரித்து இவள் உஜ்ஜீவிக்கும்படி பண்ணப் பாருங்கோள்!" என்கிறாள்.

விளக்கம் – ஜோதிடர்கள் கூறிய பின்னர் தாய்மார்கள் என்ன செய்தனர் என்பதற்கு விடை அளிக்கிறார். இந்தப் பெண்பிள்ளையுடைய தன்மையை நன்கு அறிந்திருந்தபோதிலும், வரப்போவது என்ன என்பதை அறியாமல் உள்ளதால், இவளைத் திருத்தொலைவில்லிமங்கலத்திற்கு அழைத்துச் சென்றனர். அங்கு சென்ற அவள் "அரவிந்தலோசனனே! தேவபிரானே" என்று அவனுடைய நீர்மையையும் மேன்மையையும் கூறிப் புலம்பினாள். அவனுடைய எழிலான ஒப்பனையின் வேறுபாட்டை அறிந்து உரைப்பதாக, வாய் வெருவ இவள் நிலை இருந்தது. இதனைக் கண்ட தாய்மார்கள் "இவள் நமக்கு மீண்டும் கிடைக்கமாட்டாளோ", என்று வெறுத்து, அவளுடைய தோழியிடம் வந்து, "இவளுக்கு நிலையானது உனக்குத் தெரியாமல் இல்லை. இவளை இந்த நிலையில் இருந்து மீட்பதற்கான வழியை நீ கூறவேண்டும்", என்றனர். இதற்குத் தோழி, "நீங்கள் முன்பு இவளுக்கு இந்த விஷயத்தைக் கூறி ஈடுபாட்டை ஏற்படுத்தினீர்கள். இப்போது இவளை இதிலிருந்து விலக்க முயலுகிறீர்கள்?

இதனால் என்ன பயன்? முன்பே நீங்கள் விலக்கியிருக்கவேண்டும். இனி இவளிடம் உள்ள இந்தப் பற்றுதலை நீங்கள் விடுவீர்களாக. இவளை இந்த விஷயத்திலிருந்து தள்ள முயலாமல், இவளுக்கு உதவியாக இருந்து, இவள் பிழைப்பதற்கான வழியைச் செய்யுங்கள்", என்கிறாள்.

வ்யாக்யானம் - தாய்மார் கேட்கத் தோழியிறே சொல்லுகிறாள்: பகவத் விஷயத்துக்கு "பழையார், புதியார்" என்றில்லை; தேசிகர் சொல்ல ஆதரமுடையார் கேட்குமித்தனை. "ஆசசக்ஷேத ஸத்பாவம் லக்ஷ்மணஸ்ய மஹாத்மந:" என்று இளையபெருமாள் படியை ஸ்ரீபரதாழ்வானுக்கு ஸ்ரீகுஹப்பெருமாளிறே சொல்லுகிறார். (ஆசசக்ஷே) வாக் இந்திரியத்துக்கு நிலமல்லாததும் சொல்லலாமாகாதே. (அத) ஸ்ரீபரதாழ்வான் ஸ்வபாவம் அறிந்த பின்பு. (ஸத்பாவம்) "பால்யாத் ப்ரப்ருதி ஸு ஸ்நிக்த:" என்றும், "பரவாநஸ்மி" என்றும், ஸத்தையோடு வ்யாப்தமான ஸ்வபாவத்தைச் சொன்னான். (லக்ஷ்மணஸ்ய மஹாத்மந:) கடலைக் கையாலேயிறைக்கத் தொடங்கினாள். (பரதாயா ப்ரமேயாய) "இன்னாரின்னார்க்குபதேசிக்க" என்றில்லையாகாதே. (குஹோகஹந கோசர:) காட்டில் மரங்களில் வாசியறியுமவர் இவர்கள் நிலையறியும்படி நிலவரானார். அன்றிக்கே, ராம விரஹத்தாலே ஒரு தூற்றடியிலே கிடந்தவன், தேசிகரைப் பெற்றவாறே தலையெடுத்துப் புறப்பட்டானென்றுமாம்.

விளக்கம் - இங்கு தாய்மார்கள் தோழியிடம் அறிவுரை கேட்க, அவளும் உரைத்தாள். ஆனால் வயதில் மூத்தவர்களான தாய்மார்கள், சிறுமியாகிய தோழியிடம் இப்படியாகப் பகவத் விஷயம் குறித்துக் கேட்கலாமா என்பதற்கு விடை அளிக்கிறார். பகவத் விஷயத்தைப் பொறுத்தவரை "மூத்தவர் இளையவர்" என்னும் வேறுபாடு இல்லை; அறிந்தவர்கள் கூற, இந்த விஷயத்தில் ஆர்வம் உள்ளவர்கள் கேட்பது இயல்பே ஆகும். இதற்கு ஓர் உதாரணம் காண்பிக்கிறார். அயோத்யாகாண்டம் (86-1) - ஆசசக்ஷேத ஸத்பாவம் லக்ஷ்மணஸ்ய மஹாத்மந: - என்ற ச்லோகத்தை வ்யாக்யானம் செய்கிறார்; அதாவது லக்ஷ்மணனுடைய நிலையைப் பரதனிடம் குகன் கூறுவதாக உள்ளது. (ஆசசக்ஷே) - வாக்கு இந்த்ரியத்திற்கு எட்டாத விஷயத்தைக் குறித்துக் கூறவும் இயலாது. (அத) - ஸ்ரீபரதாழ்வானுடைய இயல்பை அறிந்த பின்னர். (ஸத்பாவம்) - பாலகாண்டம் (18-27) – பால்யாத் ப்ரப்ருதி ஸு ஸ்நிக்த: – சிறு வயதிலிருந்தே லக்ஷ்மணன் இராமனிடம் அன்புடன் இருந்தார் – என்றும், ஆரண்யகாண்டம் (15-7) – பரவாநஸ்மி - இராமன் வசப்பட்டு – என்றும் உள்ளதற்கு ஏற்ப, இராமனிடம்

ப்ரேமம் மற்றும் வசப்படுதல் ஆகியவற்றுடன் இருந்தான். (லக்ஷ்மணஸ்ய மஹாத்மந:) - ஸமுத்ரத்தைக் கையால் இரைக்கத் தொடங்கினான். (பரதாயா ப்ரமேயாய) – “இப்படிப்பட்டவர் இப்படிப்பட்டவகளுக்கு உபதேசித்தல்” என்பது இன்றி. (குஹோகஹந கோசர:) - கானகத்தில் உள்ளமரங்களில் காணப்படும் வேறுபாடு அறியும் குஹன், இவர்கள் நிலை அறியும்படியான ஞானம் கொண்டான். அல்லது, இராமனைப் பிரிந்துள்ள விரகத்தால் ஒரு மூலையில் உள்ள ஒருவன், ஒரு சான்றோன் கிட்டியவுடன் தலையெடுத்து புறப்பட்டான் என்றும் கூறலாம்.

6-5-1. துவள் இல் மா மணி மாடம் ஓங்கு தொலைவில்லி மங்கலம் தொழும்
இவளை நீர் இனி அன்னைமீர்! உமக்கு ஆசை இல்லை விடுமினோ
தவள ஒண் சங்கு சக்கரம் என்றும் தாமரைத் தடம் கண் என்றும்
குவளை ஒண் மலர்க் கண்கள் நீர் மல்க நின்று நின்று குமுறுமே

பொருள் – எந்தவிதமான தோஷங்களும் இன்றி, பெரிய ஒளி கொண்ட மாணிக்கங்கள் பதிக்கப்பட்ட மாடங்கள் உயர்ந்து காணப்படும் திருத்தொலைவில்லிமங்கலத்தை வணங்கியபடி உள்ள இவளை, அவன் திருவடிகளில் கொண்டு சென்று நிறுத்திய நீங்கள், இவள் அவன் விஷயமாக மிகுந்த ஈடுபாடு கொண்ட பின்னர், “பெற்றவர்களாகிய நாம் இவளைக் கட்டுப்படுத்தலாம்” என்று இருக்கும் உங்களுக்கு, அந்த ஆசைப்படுதல் என்பது இல்லை. “இவள் நம் வசப்பட்டவள்” என்ற எண்ணத்தை விடுவீர்களாக. இதன் காரணம் என்ன? “வெண்மையான நிறம் கொண்டதும், காண்பதற்கு இனிமையாக உள்ளதும் ஆகிய திருச்சங்கு” என்றும், “சக்கரத்தாழ்வான்” என்றும், “தாமரை போன்று நன்கு மலர்ந்த விசாலமான திருக்கண்கள்” என்றும் இவள் கூறியபடி உள்ள அந்த நேரத்தில், நெய்தலின் அழகான குவளை மலர் போன்றுள்ள கண்கள் கண்ணீர் பெருகும்படியாக, தளர்ச்சியால் ஒவ்வொரு நொடிகளிலும் தனது ஆத்மாவை நிறுத்தும்விதமாக நின்று நின்று, நெஞ்சத்தின் எண்ணங்களை வாய் விட்டுக் கூற இயலாதபடி, சொற்கள் குழறியபடி இருக்கும்.

அவதாரிகை – “இவள் ப்ரக்ருதியறியாதே திருத்தொலைவில்லிமங்கலத்தைக் காட்டின பின்பு உங்கள் ஹித வசநத்துக்கு இவள் மீளுமோ?” என்கிறாள்.

விளக்கம் – “இவளுடைய தன்மை மற்றும் நிலை அறியாமல் இவளை அழைத்துச் சென்று, இவளுக்குத் திருத்தொலைவில்லிமங்கலத்தைக் காண்பித்த பின்னர், உங்களுடைய நன்மை அளிக்கக்கூடிய சொற்களைக் கேட்டு இவள் மாறுவாளோ?”, என்கிறாள்.

வ்யாக்யானம் - (துவள் இத்யாதி) “உனக்கு இப்போது உதவாதபடி தூரஸ்த்தம்” என்னுதல், “பூத காலத்தில் அவதாரங்கள்” என்னுதல், உகந்தருளின நிலங்களிலே உள்ளுநிற்கிறவனளவிலே ப்ரவணையாதல் செய்தாளாய் மீட்க நினைக்கிறிகோளோ? அசலிட்டுத் திருத்தொலைவில்லைமங்கலத்தை விரும்புகிற இவளையெங்ஙனே மீட்கும்படி? சரமாவதியிலே நிற்கிற இவளை ப்ரதமாவதியிலே நிற்பார் மீட்கவோ? துவளென்பது குற்றம்: அதின்றிக்கேயிருக்கை. அவ்வூர்ச் சரக்கிலே குற்றமுண்டாகிலன்றோ இவளை மீட்கலாவது? குற்றமுண்டாய்க் கழிந்ததல்ல. ஜீவ பரர்களிருவர்க்கும் அபஹதபாப்மத்வாதிகளுண்டா யிருக்கச்செய்தே ஜீவாத்மாவுக்கு ஹேயமுண்டாய் பகவதநுக்ரஹத்தாலே கழியும்; பரமாத்மா ஹேய ஸம்ஸர்க்காநர்ஹனாயே யிருக்கும்; அப்படியேயாயிற்று, அவ்வூரில் மாடங்களில் ரத்நங்களும்.

விளக்கம் - (துவள் இத்யாதி) - இங்கு தோழியானவள் தாய்மார்களிடம், "இவள் பரமபதத்தில் ஆசை கொண்டால் என்றால், 'அது மிகவும் தூரமாக உள்ள இடம்' என்று உரைத்து இவளை மீட்கலாம். இவள் அவதாரங்களில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டவள் என்றால், 'அவை முன்புள்ள காலங்களில் நடைபெற்றன' என்று கூறி மீட்கலாம். திருத்தொலைவில்லிமங்கலத்தில் நிற்பவனைக் குறித்து ஈடுபாடு கொண்டால் "அந்த விஷயம் அளவிடமுடியாதது” என்று கூறி மீட்கலாம். ஆனால் இவள், அவன் மிக்க மகிழ்வுடன் எழுந்தருளியுள்ள இடங்களில் அல்லவோ ஆழ்ந்த ஈடுபாடு கொண்டுள்ளாள்? இப்படிப்பட்டவளை மீட்பதற்கு உபாயம் உள்ளதோ? இவள் திருத்தொலைவில்லி மங்கலத்தில் உள்ள தேவபிரானையும் விட்டவளாக, அந்தத் திவ்யதேசம் குறித்து அல்லவோ மயங்குகிறாள்? இவளை எப்படி மீட்பது? அவனுடைய அடியார்கள் விஷயத்தில் நிற்கும் இவளை, முதல்படியான பகவத் விஷயத்தில் நிற்கும் நீங்கள் எப்படி மீட்க இயலும்? துவள் என்றால் குற்றம்; அது இல்லாதவன். அந்த இடத்தின் விஷயம் குறித்து ஏதேனும் குற்றம் இருந்தால் அல்லவோ, அதனைக் காரணம் காண்பித்து இவளை மீட்க முடியும்? குற்றம் முன்பு

இருந்து, இப்போது நீங்கியது என்பதும் கூட அல்ல; இதற்கு ஓர் உதாரணம் கூறுகிறார்; ஜீவர்களுக்கும் பரமாத்மாவிற்கும் “அபஹதபாப்மா - பாபம் அற்ற தன்மை” என்பது பொதுவாகவே உள்ளபோதிலும், ஜீவாத்மாவிற்கு அத்தகைய தாழ்வுகள் ஏற்பட்டு, பகவத் அனுக்ரஹத்தால் அவை விலகும்; ஆனால் பகவானோ அப்படிப்பட்ட தோஷங்கள் ஏதும் தன்னிடம் வந்து சேர்வதற்கான தகுதி அற்றவனாக உள்ளான்; இது போன்றே அந்த ஊரில் உள்ள மாடங்களும் இரத்தினங்களும் உள்ளன.

வ்யாக்யானம் - (மாமணி) ஒளியேயல்ல, பெருவிலையனுமாயிருக்கும். (ஓங்கு) அவ்வூரில் மாடங்களின் நிழலீடு திருநகரியளவும் வந்து காணுமிருப்பது. “இடமணித்து” என்றுபோலேகாணும் நாயகன் பிரிந்தது. மாளிகையின் நிழற் கீழேயிட்டு வைத்துக்காணும் பிரிந்தது. அவன் பிரிந்தபோது தொடங்கி அவ்வூரையும் அவ்வூரில் மாடங்களையும் அவற்றில் மாணிக்கங்களையும் பார்த்து, வைத்த கண் வாங்கமாட்டாதே யிருந்தாள் போலே காணும்.

விளக்கம் – (மாமணி) - ஒளி வீசுவது மட்டும் அல்ல, பெருத்த விலைமதிப்பு கொண்டதாக உள்ள மாணிக்கங்கள். (ஓங்கு) - அந்த ஊரில் உள்ள மாடங்களுடைய நிழலானது ஆழ்வார்திருநகரி முடிய வந்து நிற்கிறது. இவளுடன் கலந்து அவன் பிரிந்தபோது, இவள் அவனிடம், "உங்கள் ஊர் எது?", என்றாள். அவனும் ஊரின் அருகாமையைக் கூறுவதற்காக, "இதோ, அருகிலேயே உள்ளது. அந்த ஊரின் மாடங்களுடைய நிழலே இவை ஆகும்” என்று காண்பித்துப் பிரிந்தான். அவன் இவ்விதம் பிரிந்த காலம் தொடங்கி, அந்த ஊரையும், அந்த ஊரில் உள்ள மாடங்களையும், அவற்றில் உள்ள மாணிக்கங்களையும் நோக்கியவளாக, வைத்தகண் வாங்காமல் உள்ளவளாக இருந்தாள்.

வ்யாக்யானம் - (தொலைவில்லிமங்கலம்) துருப்புக்கூடாக அவ்வூரையன்றோ இவள் உகந்தது. (தொழுமிவளை) “கறுத்திருக்கும், வெளுத்திருக்கும்” என்னுமாபோலே, தொழுகை நிரூபகமாயிருக்கை. “ப்ராஞ்ஜலிம் ப்ரஹ்வமாஸீநம்” என்னுமாபோலே; “கணபுரங்கைதொழும்பிள்ளை” என்னுமாபோலே. (இவளை) இவனை மீட்கப் பார்ப்பதே, இவள் படியை புத்தி பண்ணியன்றோ மீட்பது! (தொழுமிவளை) இவள்படி கைமேலே காணாநிற்கச் செய்தே நீங்கள் மீட்கத் தேடுகிறபடி யெங்ஙனே? (இவளை நீர்) பழி சொல்லப் பணைக்கிறவள் இவள், பழி

பரிஹரிக்கப் பார்க்கிறிகோள் நீங்கள். (இனி) தொழுகை தேஹயாத்ரையாதற்கு முன்னேயன்றோ மீட்கப் பார்ப்பது.

விளக்கம் – (தொலைவில்லிமங்கலம்) - இவளுக்கு வேண்டியவர்கள் மற்றும் வேண்டாதவர்கள் என்ற வேறுபாடு ஏதும் காண்பிக்காமல், அந்த ஊரில் உள்ள அனைவரையும் கண்டு இவள் மகிழ்ந்து, அந்த ஊரையே உகந்தாள். (தொழும் இவளை) - “இந்தப் பொருள் கருமையாக இருக்கும், இந்தப் பொருள் வெண்மையாக இருக்கும்" என்று நிறத்தை வைத்துப் பொருள்களை உணர்த்துவது போன்று இவளை "தொழுதல்” என்பதன் மூலம் உணர்த்தும்படி உள்ளாள். இதற்கு இரண்டு உதாரணங்கள் கூறுகிறார்; அயோத்யாகாண்டம் (4-42) - ப்ராஞ்ஜலிம் ப்ரஹ்வமாஸீநம் – கைகள் குவித்தவனும், வணங்கியவனும் - என்றும், பெரியதிருமொழி (8-2-9) – கணபுரங்கைதொழும்பிள்ளை - என்றும் உள்ளது காணலாம். (இவளை) - இவளுடைய சரீரம் மற்றும் நடத்தை மூலம் அல்லவோ நீங்கள் இவளை மீட்கப் பார்க்கிறீர்கள்! (தொழும் இவளை) - ஆனால் இவள் இவ்விதம் உள்ளதை நீங்கள் நேரடியாகக் கண்ட பின்னரும் இவளை நீங்கள் மீட்க முயல்வது எப்படி? (இவளை நீர்) – இவளையும அவனையும் இணைத்து ஊரார் கூறும் பழிச்சொற்களைக் கேட்டு மகிழ்ந்து, அதனால் உண்டான உகப்பால் தனது சரீரம் பெருத்தபடி இவள் உள்ளா; இப்படிப்பட்ட இவளை "இவளுடைய பழியை நாங்கள் நீக்க முயல்கிறோம்", என்று கூறி மீட்கப் பார்ப்பது எப்படி? (இனி) - இப்படிப்பட்ட தொழுதல் என்பதே இவள் தனது சரீரத்தைத் தாங்குவதற்கான நிலை என்று ஆவதற்கு முன்பாக அல்லவோ நீங்கள் மீட்பதற்கு முயலவேண்டும்?

வ்யாக்யானம் - (அன்னைமீர்) பகவத் விஷயத்திலே யவகாஹிக்க என்றொன்றில்லையோ? நியந்த்ரு நியாம்ய பாவமேயோ வேண்டுவது; பெற்றவர்களென்னா, அசக்யங்களிலே யிழியக்கடவதோ? (உமக்காசையில்லை) ப்ராப்த யௌவனைகளானார் பக்கல் பெற்றவர்களுக்கு ப்ராப்தியுண்டோ; புக்கவிடத்தே ப்ரவணையாகா நிற்க, பெற்ற ப்ராப்தி கொண்டு மீட்கவோ? (விடுமினோ) இவ்வளவில் நீங்கள் கைவாங்கவமையும். பெற்ற தாய்மார் “விடுமின்” என்னுங்காட்டில் விடார்களிறே; பின்னையும் நிர்ப்பந்திக்க வேண்டா, இவளுக்கு ஓடுகிற ரஸத்தைக் கண்டுகொடு நிற்கப் பாருங்கோள்; இவளுடைய அநுபவத்துக்குத் தண்ணீர்த் துரும்பாகாதே இத்தைக் கண்டுகொடு நிற்கவமையுமென்கிறாள். எங்களை “ஆசைப்பட வேண்டா, விடுங்கோள்”

என்றதென்? என்னில், இவள் பேச்சிலும் நினைவிலும் நீங்களாதல் நானாதலுண்டோ? உங்களையாதல் என்னையாதல், சொல்லுதல் நினைத்தல் செய்கிறாளோ? “த்யக்த்வா புத்ராம்ச்ச தாராம்ச்ச” என்னும் நிலையன்றோ இவளது!

விளக்கம் – (அன்னைமீர்) - "பகவத் விஷயத்தில் ஆழமாக மூழ்கியபடி உள்ளவர்களை மீட்க இயலாது என்பது ஏதும் இல்லையோ? இதற்கு, 'நியமித்தல், நியமிக்கப்படுதல்' என்ற உறவுமுறை அவசியம் இல்லை. ஆனால் இவள், பெற்றவர்களாகிய எங்களுடைய சொற்களைக் கேட்கவேண்டும் அல்லவோ?", என்பதற்கு விடை அளிக்கிறார். பெற்றவர்கள் என்றால், பிள்ளைகளுக்குப் பொருத்தம் இல்லாத செயல்களில் ஈடுபடுவார்களோ? (உமக்கு ஆசை இல்லை) - தகுந்த பருவத்தைப் பிள்ளைகள் அடைந்தவுடன் அவர்கள் விஷயத்தில் "பெற்றவர்கள்" என்று உரிமை கூறி மீட்பது சரியா? (விடுமினோ) – இந்த நிலையில் நீங்களாகவே இதிலிருந்து பின்வாங்கினால் மட்டுமே பொருத்தமாக இருக்கும். “விடுங்கள்" என்பதற்குப் பின்னரும் பெற்றவர்கள் விடாமல் இருப்பாரோ? அதன் பின்னரும் நீங்கள் இவளை நிர்ப்பந்தம் செய்யவேண்டாம். இவள் விஷயத்தில் இவள் அனுபவிக்கும் சுவையைக் கண்டபடி நீங்கள் நிற்பீர்களாக. இவளுடைய அனுபவத்திற்கு, தண்ணீர்ப்பாம்பு போன்று இடையூறாக இல்லாமல், இதனை நீங்கள் பார்த்தபடி இருத்தலே இங்கு பொருத்தமாக அமையும். இதனைக் கேட்ட தாய்மார்கள் தோழியிடம், “இவளைஇதிலிருந்து மீட்பதற்கு ஆசைப்படவேண்டாம் என்று எங்களிடம் ஏன் கூறுகிறாய்?", என்றனர். இதற்குத் தோழி, "இவளுடைய பேச்சு மற்றும் செயல் போன்றவற்றில் நீங்களும் நானும் உள்ளது போன்று உங்களுக்குத் தோன்றுகிறதா?”, என்றாள். யுத்தகாண்டம் (17-14) - த்யக்த்வா புத்ராம்ச்ச தாராம்ச்ச – புத்திரர்களையும் மனைவியையும் துறந்து - என்னும் நிலையில் அல்லவோ இவள் உள்ளாள்?

வ்யாக்யானம் - (தவளவொண் சங்கு) ச்யாமமான திருமேனிக்குப் பரபாகமான வெண்மையையுடைத்தாய், “உண்பது சொல்லில் உலகளந்தான் வாயமுதம்” என்கிற அழகையுடைத்தான சங்கு. (சக்கரம்) அங்ஙனம் ஒரு விசேஷணமிட்டுச் சொல்லவொண்ணாத அழகையுடைய சக்கரம். (என்றும்) “இவற்றைக் காணவேணும்” என்னுதல்; “இவற்றோடே வரவேணும்” என்னுதல்

சொல்லமாட்டுகிறிலள், பலஹாநியாலே. (தாமரைத் தடங்கணென்றும்) அந்த ஆழ்வார்களளவும் வந்து அலையெறிகிற திருக்கண்கள், தாமரையையொரு வகைக்கு ஒப்பாகச் சொல்லலாய், போக்தாக்களளவன்றிக்கே யிருக்கிற திருக்கண்கள். (என்றும் என்றும்) ஒரு மலை யெடுத்தாற்போல, சொல்லுக்குச் சொல்லு தளர்ந்து நடுநடுவே விச்சேதித்தாயிற்றுச் சொல்லுவது. திவ்யாயுதங்களையும் கண்ணழகையுங் காட்டியாகாதே இவளைத் தோற்பித்தது. (குவளையித்யாதி) இக்கண்களைக் கண்டால் தாமரைத் தடங்கணன்றோ நீர் மல்கவடுப்பது? கண்ணும் கண்ணநீருமாய் இவளிருக்கிற இருக்கை கண்டு கொண்டிருக்கவன்றோ உங்களுக்கு அடுப்பது? "ஆஹ்லாத சீத நேத்ராம்பு:" இத்யாதி. ஸதா தர்சநத்துக்கு ஒரு தேசந்தேடிப் போகவேண்டாகாணும். குவளைப் பூப்போலே அழகிய கண்கள் நீர் மல்க, அவள் தன்னுடைய ஸ்த்ரீத்வத்தைக் காற்கடைக்கொள்ள, நீங்கள் எங்ஙனே மீட்கப் பார்க்கும்படி? கண்ணநீர் பாய்கையாவது ஸ்திரீத்வமழிகையிறே. (நின்று நின்று குமிறுமே) பேச்சுப் போய்க் கண்ணநீராய், கண்ணநீர் போய்த் தடுமாறுகிற அவஸ்த்தையிலே மீட்கப் போமோ?

விளக்கம் – தவளவொண் சங்கு) - ச்யாமள நிறமான திருமேனிக்கு ஏற்ற நிறம் கொண்டதான அழகு நிறைந்த சங்கு. (சக்கரம்) - அப்படி ஒரு அடையாளம் வைத்துக் கூற இயலாதபடி அழகு நிறைந்த சக்கரம். (என்றும்) - பலவீனமாக உள்ளதால் "இவற்றைக் காணவேண்டும்; இவற்றோரு வரவேண்டும்" என்று அவனிடம் கூறவும் முடியாமல் இவள் உள்ளாள். (தாமரைத் தடங்கணென்றும்) - ஆழ்வார்கள் முடிய வந்து அலையை வீசும் திருக்கண்கள். தாமரையை ஒருவிதத்தில் ஒப்புமை கூறலாம்படியாக, அனுவிப்பவர்கள் அளவன்றிக்கே உள்ள திருக்கண்கள். (என்றும் என்றும்) - ஒரு மலையை எடுத்தவள் போன்று பலவீனம் அடைந்து, ஒவ்வொரு சொல்லிற்கும் நடுநடுவே தளர்ந்து, தனித்தனியே கூறுகிறாள். திவ்யமான ஆயுதங்கள் மற்றும் திருக்கண்களை ஏன் கூறவேண்டும் என்றால், அவற்றைக் காண்பித்து அல்லவோ இவளைத் தோற்கடித்தான்! (குவளை இத்யாதி) - இவளுடைய கண்களைக் கண்டால், தாமரை போன்றுள்ள அவனுடைய திருக்கண்களில் அல்லவோ நீர் பெருகவேண்டும்? கண்ணும் கண்ணீருமாக இவள் உள்ள இருப்பைக் கண்டு நிற்பதற்கு உங்களால் எப்படி முடிகிறது? ஸ்ரீவிஷ்ணு தத்வத்தில் - ஆஹ்லாத சீத நேத்ராம்பு: - பகவத் அனுபவத்தால் பெருகிய சந்தோஷத்தால் குளிர்ந்த கண்கள் – என்பது காண்க.

அவனை எப்போதும் கண்டு அனுபவித்தபடி இருப்பதற்கு ஒரு இடமான பரமபதம் தேடிச் செல்லவேண்டாம். குவளை மலர் போன்ற அழகிய கண்கள் நீர் பெருகி நிற்க, தனது பெண்மைத் தன்மையையும் புறந்தள்ளி நிற்கும் இவளை, நீங்கள் மீட்க முயல்வது எப்படி? கண்களில் நீர் பெருகுவது என்பது பெண்மைத்தன்மை அழிதலே ஆகிறது. சொற்கள் வராமல் கண்ணீராக வந்து, கண்ணீரும் வராமல் தடுமாறி நிற்கிறாள்; இவளை மீட்க இயலுமோ?

வ்யாக்யானம் - ராஜகோஷ்டியிலே "உகும், இறும்" என்று சிலர் பொருள் சொல்ல, விக்ரமசிங்கனென்பானொருவன், "அங்ஙனல்ல, கன்றைக் கடக்கக் கட்டி வைத்தால் முலைக்கண் கடுத்துப் பசு அலமந்து படுமாபோலே, உள்ளோடுகிற க்லேசம் வாய்விடமாட்டாதே நோவுபடுகிற இவளுக்கு இது வார்த்தையோ?" என்றான். பெருவெள்ளத்தில் சுழிக்குமாபோலே, அகவாயிலுள்ளது வெளியிடமாட்டாள். உள்ளே நின்று சுழிக்கிறபடி. தொலைவில்லிமங்கலந் தொழுமென்கையாலே காயிக வ்யாபாரம் சொல்லிற்று; தவளவொண் சங்கு சக்கரமென்றும் தாமரைத் தடங்கணென்றும் என்று சொல்லுகையாலே வாசிக வ்யாபாரம் சொல்லிற்று; குமிறுமென்கையாலே மாநஸ வ்யாபாரம் சொல்லிற்று.

விளக்கம் - இந்த இடத்தில் இவளுடைய நிலைமை குறித்துக் கூறும்போது, ராஜகோஷ்டியில் உள்ள சிலர் "உகும் இறும்" என்று பொருள் கூறினர். அப்போது விக்ரமசிங்கன் என்னும் ஒருவன், "அப்படி அல்ல. பசுவை விட்டு கன்றைத் தள்ளி வைத்தால், தாய்ப்பசுவின் பால் சுரக்கும் காம்புகள் கடுத்துப் போக, பசுவானது செய்வது அறியாமல் படுத்துக்கிடக்கும். அது போன்று இவளுக்குள் இருக்கும் துன்பமானது வெளிக்கூறாதபடியான நிலையில் உள்ளது. இவ்விதம் துன்பம் கொண்ட இவளுடைய நிலையை உணர்த்துவதற்கு இதுதான் சொற்களோ?", என்றான். பெரிய வெள்ளத்தில் சுழிகள் ஏற்படுவது போன்று, உள்ளத்தில் இருப்பதை வெளியிடமாட்டாள். உள்ளேயே வைத்துச் சுழல்கிறாள். "திருத்தொலைவில்லிமங்கலம் தொழும்" என்பதன் மூலம், சரீரம் கொண்டு செய்யும் கைங்கர்யம் கூறப்பட்டது; "தவளவொண் சங்கு சக்கரம்" என்றும், "தாமரைத் தடங்கண்" என்றும் கூறுவதன் மூலம் சொற்கள் கொண்டு செய்யும் கைங்கர்யம் கூறப்பட்டது. "குமிறும்" என்பதால் மனதால் செய்யப்படும் கைங்கர்யம் கூறப்பட்டது.

ஸ்வாமி நம்மாழ்வார் திருவடிகளே சரணம்
ஸ்வாமி நம்பிள்ளை திருவடிகளே சரணம்
ஸ்வாமி வடக்குத்திருவீதிப்பிள்ளை திருவடிகளே சரணம்

...தொடரும்